**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

தேதி : 07.06.2025 - நேரம் : மாலை 6.10 மணி

------------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

நாட்டின் விவசாயிகள் நலனை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா-இங்கிலாந்து இடையே சமீபத்தில் முடிவடைந்த வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரட்டை பங்களிப்பு மாநாட்டை ஒரு மைல்கல் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தியாக திருநாளாம் பக்ரித் பண்டிகை புதுச்சேரியில் இன்று இஸ்லாமியர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது

மத்திய அரசின் விக்சித் க்ரிஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம் இன்று புதுச்சேரியில் கீழ்பரிக்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நடைபெற்றது.

*பிரதமர்* (8)

நாட்டின் விவசாயிகள் நலனை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணியின் 11 ஆண்டு கால ஆட்சி நிறைவை ஒட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் நலனுக்காக அரும்பாடுபடும் விவசாயிகளுக்கு சேவை செய்வதை நல் வாய்ப்பாக கருதுவதாக கூறியுள்ளார். பல்வேறு முன்னோடி திட்டங்களால் விவசாயிகளின் வாழ்வு வளம் பெற்று, வேளாண் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

*கனடா* (6)

கனடாவின் கணணாஸ்கியில் வரும் 15 ஆம் தேதி தொடங்கும் ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்க அந்நாட்டு பிரதமர் திரு மார்க் கெர்னி, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், தமது இந்த பயணத்தை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக சமூக வலைதளத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளார். இந்தியா-கனடா இடையே இருதரப்பு பரஸ்பர நலன்களை மேம்படுத்துவதில் இந்திய அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*சனி-பதினோராம் ஆண்டு* 1 (7)

இந்தியா, கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி சிறப்பு தொடர் ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*சனி-பதினோராம் ஆண்டு* 2 (19)

**(வாய்ஸ்)**கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியுடன் கூடிய மேம்பாட்டு உத்தி ஒன்றை கடைபிடித்து வருகிறது. ஆறுகளுக்கு மீண்டும் உயிர் கொடுப்பது முதல், சுற்றுச் சூழல் வள மீட்பு மற்றும் பசுமை உள்கட்டமைப்பு வரை பல்வேறு நடவடிக்கைகள் மூலம், சுற்றுச் சூழல் பாதுகாப்பை உரிய முறையில் அணுகுவதில், இந்தியா, வலுவான கடமைப் பற்றை வெளிப்படுத்தி உள்ளது. உலக அளவில், ஆறுகளுக்கு புத்துயிர் அளிக்கும் திட்டங்களில், மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாக, இந்தியாவின் நமாமி கங்கை இயக்கம் அமைந்துள்ளது. இத்திட்டத்தினால், நீரின் தரம் மற்றும் பல்லுயிர்ச் சூழல் மேம்பட்டு, கங்கை நதிக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகளில் உள்ளூர் மக்களின் பங்கேற்பும் ஊக்குவிக்கப் படுகிறது. ஸ்வச் பாரத் இயக்கம், மற்றும், கோபர்தன் திட்டத்தினால், குறிப்பாக கிராமப் பகுதிகளில், துப்புரவு மற்றும் கழிவு மேலாண்மை நிலவரங்கள் பெருமளவில் மேம்பட்டுள்ளன. மக்கும் குப்பைகளில் இருந்து, உயிரி எரிவாயு, மற்றும் பசுந்தாள் உரம் தயாரிக்கப் படுவதை, கோபர்தன் திட்டம் ஊக்குவிப்பதால், தூய்மை நிலவரங்கள் மேம்படுவதுடன், எரிசக்தித் துறையில் சுயசார்பு முயற்சிகளும் வலுப் பெற்றுள்ளன. தாயின் பெயரில் ஒருமரம் இயக்கம்

போன்ற பிரச்சாரங்கள், மக்களை பெரும் எண்ணிக்கையில் திரட்டி, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தி

*சனி-பதினோராம் ஆண்டு 3 (18)*

உள்ளன. சிங்கம், மற்றும் புலி இனங்களை பாதுகாக்கும் திட்டங்களால், விலங்கின வாழ்விடங்கள் விரிவாக்கப்பட்டு, விலங்கினங்கள் அழிவில் இருந்து மீட்கப் பட்டுள்ளன. இந்தியாவில் தற்போது, 3 ஆயிரத்து 682 புலிகள் இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. இது உலக அளவிலான மொத்த எண்ணிக்கையில், 75 சதவிகிதத்தை விட அதிகமாகும். நாட்டில், சதுப்பு நிலங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளை பாதுகாக்கும் பணிகளும் உத்வேகம் பெற்றுள்ளன. இந்தியாவில் தற்போது, ஆசியாவிலேயே அதிக எண்ணிக்கையில், 91 ராம்சர் மண்டலங்கள் இருப்பதும், அண்மையில், ராஜஸ்தானில் 2 இடங்கள், ராம்சர் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளதும், சதுப்பு நிலங்களின் பாதுகாப்பில், நாட்டின் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தி உள்ளன. இந்தியாவில் 13 கடற்கரை பகுதிகள், நீலக் கொடி அங்கீகாரம் பெற்று, பெருமிதம் ஈட்டி உள்ளன. அம்ரித் தாமோதர், MISHTI போன்ற திட்டங்களால், பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதில் முக்கிய பங்காற்றும் சதுப்பு நிலங்கள் மற்றும் மாங்குரோவ் காடுகளை பாதுகாக்கும் முயற்சிகள், மேலும் முன்னேறி உள்ளன. பசுமைச் சூழலுக்கு மாறுதல் என்பது, இந்தியாவை பொறுத்தவரை, வெறும் கொள்கை முன்னெடுப்பாக அன்றி, மக்கள் இயக்கமாகவும், உலகிற்கான பொறுப்பாகவும், எதிர்கால தலைமுறைகளுக்கான வாக்குறுதியாகவும் திகழ்கிறது.

*ஜெய்சங்கர் (7)*

இந்தியா-இங்கிலாந்து இடையே சமீபத்தில் முடிவடைந்த வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரட்டை பங்களிப்பு மாநாட்டை ஒரு மைல்கல் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் இங்கிலாந்து வெளியுறவு செயலர் திரு டேவிட் லாமியுடன் நடந்த சந்திப்பின் போது, அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தும் என அவர் கூறியுள்ளார்.

*சவுகான்* (6)

விவசாயிகள் விக்சித் க்ரிஷி சங்கல்ப் அபியான் எனும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தினை பயன்படுத்தி விவசாய பணிகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கேட்டுக் கொண்டுள்ளார். மத்திய பிரதேசத்தின் செஹோரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலந்து கொண்டு 51 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு திட்டங்களை தொடங்கி வைத்து பேசுகையில், இவ்வாறு கூறியுள்ளார்.

*பக்ரித்* (4)

தியாக பெருநாளாம் பக்ரித் பண்டிகை நாடு முழுவதும் இன்று இஸ்லாமியர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நாளை ஒட்டி தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். புதுச்சேரியிலும் பக்ரித் பண்டிகையை ஒட்டி சிறப்பு தொழுகைகள் நடைபெற்றது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு ……

(வாய்ஸ்)

*பக்ரித் வாய்ஸ்* 1 (18)

இஸ்லாமியர்கள் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகை பக்ரித். ஏழைகளுக்கு உதவிடும் வகையில் பக்ரீத் பண்டிகையை கொண்டாடுகின்றனர். இதனை ஈகை திருநாள் என்றும் கூறுவர். இஸ்லாமியர்களின் ஐந்து முக்கிய கடமைகளில் ஒன்று ஹஜ் பயணம் மேற்கொள்வது பக்ரீத் பண்டிகையினையொட்டிதான் நிறைவேற்றப்படுகிறது. அதோடு மட்டும் அல்லாமல் புத்தாடை அணிந்து தங்கள் வீடுகளில் ஆடு உள்ளிட்டவைகளை குர்பானி செய்வது வழக்கம். அதன்படி பக்ரீத் பண்டிகையான இன்று புதுவையில் உள்ள பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகைகள் நடந்தன. இதில் வழக்கமான உற்சாகத்துடன் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர். புதுவை முஹ்ஹிதியா பள்ளி வாசல், அஹமதியா பள்ளி வாசல், மஸ்ஜிதே சுல்தானிய்யா பள்ளி வாசல், மீராபள்ளிவாசல், முஹம்மதியா பள்ளி வாசல் உள்ளிட்ட பல்வேறு பள்ளி வாசல்களில் சிறப்பு தொழுகை நடைபெற்றது, முன்னதாக, இன்று காலை தமிழ்நாடு ஜவ்ஹீத் ஜமாஅத் சார்பில் புதுவை கடற்கரை சாலையில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு சிறப்பு தொழுகை நடத்தினர்

இதேபோல், ஏனாமில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் அங்குள்ள நூற்றுக்கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு தொழுகை நடத்தி, ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டதாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கின்றார்.

விக்சித் க்ரிஷி(15)

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் க்ரிஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம் இன்று புதுச்சேரியில் கீழ்பரிக்கல்பட்டு, மேல்பரிக்கல்பட்டு, கொமத்தான்மேடு, சின்ன ஆராய்ச்சிக்குப்பம், பெரிய ஆராய்ச்சிக்குப்பம் உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத் துறை நிபுணர்கள் டாக்டர் பி டி சித்ரா, திரு பரந்தாமன், மற்றும் திருமதி அருணா ஆகியோர் கலந்து கொண்டு கால்நடை வளர்ப்பு, தீவன நிர்வாகம், மீன் வளர்ப்பு, மீன் கழிவு மேலாண்மை மற்றும் மண்வள அட்டையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வுகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது விதை விநியோகம், மண் பரிசோதனை, வினாடி-வினா மற்றும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன. இதில் 12 பெண் விவசாயிகள் உட்பட 164 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். வேளாண் மற்றும் விவசாய நலத்துறை இணை இயக்குநர் திரு குமாரவேல், பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் விஜயகுமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

முருகன் (8)

நாட்டில் சமூக நீதியை நிலைநாட்டவே ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். தமிழகம் உட்பட எந்த மாநிலத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், மக்களவை தொகுதி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இன்று கோவை வந்துள்ள அவர், வரும் 9 ஆம் தேதி புதுச்சேரி மாநில சட்டப்பேரவைக்கான தேசிய இ-விதான் செயலியை தொடக்கி வைப்பதற்காக புதுச்சேரி வரவுள்ளார்.

வானிலை (7)

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 2 நாட்களுக்கு இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை 1 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறைந்துள்ளது. புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வெப்பநிலையில் எந்த மாற்றமும் இன்றி இயல்பை ஒட்டி காணப்படுவதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

*அமித் ஷா* (4)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வருகிறார். மதுரையில் நாளை நடைபெற உள்ள பாஜக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றும் அவர், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான ஆலோசனைகளை வழங்குவார் என எதிர்பார்க்கப் படுகிறது.